| | | |
|---|---|---|
| | இந்திய கடல் மீன்வள மசோதா, 2021 | |
| | இந்த<br>மசோதா | |
| | *பாரம்பரிய மற்றும் சிறிய அளவில் மீன்பிடிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துதல், இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் மீன் வளங்களை நிலையாக மேம்படுத்துதல் மற்றும் இந்திய மீன்பிடிக்கலன்கள் மூலம் ஆழ்கடலின் மீன்வளத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துவதை உறுதிசெய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது தற்செயலான விஷயங்களுக்கு.* | |
| | இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் பாராளுமன்றத்தில் கீழ்க்கண்டவாறு சட்டமாக்கப்படும். | |
| | **அத்தியாயம் 1**<br>**அறிமுகம்** | |
| சுருக்கமான தலைப்பு மற்றும் தொடக்கம் | **1.** *(1)* இந்தச் சட்டம் இந்திய கடல் மீன்வளச் சட்டம், 2021 என்று அழைக்கப்படும். | |
| | *(2)* இந்தச் சட்டம் மத்திய அரசு அதிகாரப்பூர்வ அரசிதழில் அறிவிக்கும் தேதியிலிருந்து அமலுக்கு வரும் | |
| | இந்தச் சட்டத்தின் வெவ்வேறு விதிகள் வெவ்வேறு தேதிகளில் நடைமுறைப்படுத்தப்படலாம். இந்தச் சட்டம் தொடங்குவதற்கான எந்தவொரு விதிமுறையிலும் அந்த குறிப்பு அந்த விதி நடைமுறைக்கு வருவதற்கான குறிப்பாக கருதப்படும். | |
| பொருத்தப்பாடு | **2.** இந்தச் சட்டம் மீன்பிடி மற்றும் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும். | |
| | *(i)* பிரத்தியேக பொருளாதார மண்டலத்திலும் அதற்கு அப்பால் உள்ள பன்னாட்டு மீன்பிடிக்கும் இந்திய மீன்பிடிக்கலன்களுக்கும்; | |
| | *(ii)* இந்திய கடல் பிராந்தியத்தில் மீன்பிடிக்கும் அயல்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கும்; | |
| வரையறைகள் | **3.** இந்தச் சட்டத்தின் படி, | |
| | *(a)* "அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி" என்பவர் பிரிவு 22-ன் கீழ் அறிவிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆவார்; | |
| | *(b)* "ஆலோசனைக்குழு" என்பது பிரிவு 21-ன் கீழ் அமைக்கப்பட்ட கடல்மீன்வளம் பற்றிய ஆலோசனைக் குழு; | |
| | *(c)* "பிரத்தியேகப் பொருளாதார மண்டலம்" என்பது பிராந்தியக் கடல் பகுதி, கண்டத்திட்டு, பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் மற்றும் இதர கடல் மண்டலங்கள் சட்டம் 1976-இன் பிரிவு 7-க்குள் அடங்கிய இந்திய பிரத்யேகப் பொருளாதார மண்டலம் ஆகும்; | 80 of 1976. |
| | *(d)* "மீன்" என்பது கடல் பாலூட்டிகள், கடல் ஊர்வன மற்றும் கடல் பறவைகளை தவிர்த்த துடுப்பு மீன்கள், மெல்லுடலிகள், கணுக்காலிகள் மற்றும் இதர கடல்வாழ் விலங்குகள் மற்றும் தாவரங்களை குறிக்கும்; | |
| | *(e)* "மீனவர்" என்பது வாழ்வாதாரம் அல்லது இலாப நோக்கத்திற்காக மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களை குறிக்கும்; | |

| | | | |
|---|---|---|---|
| | *(f)* | *''மீன்பிடித்தல்'' என்பது ஏதோ ஒரு முறையில் மீன்களைத் தேடுதல், பின்தொடர்தல், பிடித்தல், எடுத்தல் அல்லது அறுவடை செய்தல்;* | |
| | *(g)* | *''மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகள்'' என்பவை மீன்களைத் தரையிறக்குதல், சிப்பமிடுதல், சந்தைப்படுத்துதல், பதப்படுத்துதல், பாதுகாத்தல் அல்லது உயிர் மீன் போக்குவரத்து அல்லது தரையிறக்கப்படாத மீன் போக்குவரத்து மற்றும் இதர செயல்பாடுகளைக் குறிக்கும்;* | |
| | *(h)* | *''மீன்வளம்'' என்பது மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் கடல் மீன் வளங்களை பயன்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது;* | |
| | *(i)* | *''மீன்வளத் தரவுகள்'' என்பவை மீன்பிடித்தல் மேற்க்கொள்ளப்படும் சமூகப்பொருளாதார, உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் அளவுருக்கள் பற்றிய தகவல்கள் ஆகும். இந்தத் தரவுகள் இந்தியாவின் மீன்வள ஆதாரங்களின் பாதுகாப்பு, மேலாண்மை மற்றும் அறிவியல் புரிதலுக்கு அவசியமானவை;* | |
| | *(j)* | *''மீன்பிடிக்கலன்கள்'' என்பவை கடலில் மீன்பிடிக்க அது சார்ந்த நடவடிக்கைகளில் இயந்திரமயமாக்கப்பட்ட அல்லது இயந்திரமயமாக்கப்படாத ஒரு கப்பல் அல்லது படகு ஆகும்;* | |
| | *(k)* | *''அயல்நாட்டு மீன்பிடிக்கலன்கள்'' என்பவை இந்திய மீன்பிடிக்கலன்களைத் தவிர மற்ற மீன்பிடிக்கலன்கள் ஆகும்;* | |
| | *(l)* | *''ஆழ்கடல்'' என்பது பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தின் எல்லைகளுக்கு வெளியே இருக்கும் வேறு எந்த நாட்டின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்திற்குள்ளும் வராத கடல்நீர் பகுதியை குறிக்கும்;* | |
| | *(m)* | *''இந்திய மீன்பிடிக்கலன்கள்'' என்பவை இந்தியக் குடிமக்களுக்குச் சொந்தமான மீன்பிடிக்கலன்கள் மற்றும் வணிகக் கப்பல் சட்டம், 1958 அல்லது இந்தியாவில் தற்போது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் விதிகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக்கலன்கள் என்று பொருள்படும்;* | 44 of 1958. |
| | *(n)* | *''உரிமம்'' என்பது மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காக பிரிவு 17-இன் உட்பிரிவு 5-இன் கீழ் வழங்கப்பட்ட மீன்பிடி உரிமம் ஆகும்;* | |
| | *(o)* | *''உரிமம் வழங்கும் அதிகாரி'' என்பவர் சம்பந்தப்பட்ட மாநில அரசின் கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டங்களின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரி ஆவார்;* | |
| | *(p)* | *''இந்தியாவின் கடல்சார் மண்டலங்கள்'' என்பவை இந்தியாவின் பிராந்திய கடற்ப்பகுதி மற்றும் இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் ஆகியவற்றைக் குறிக்கும்;* | |
| | *(q)* | *மீன்பிடிக்கலன்களைப் பொறுத்த வரை, ''தலைவர்'' என்பவர் மீன்பிடிக்கலனில் கட்டளை இடும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளைக் கொண்ட நபர் ஆவார்;* | |
| | *(r)* | ''இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்'' *(Mechanised fishing vessel)* என்பது மீன்பிடிக்கலனின் உடற்பகுதியில் இயந்திரம் பொருத்தப்பட்டு அந்த இயந்திர சக்தியைப் பயன்படுத்தி மீன்பிடிக்கலனை செலுத்துவதற்கும், மீன்பிடி வலையை வீசுதல் மற்றும் இழுத்தல் போன்ற மீன்பிடி செயல்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும் எந்த மீன்பிடிக்கலனையும் குறிக்கும்; | |
| | *(s)* | ''இயந்திரம் பொறுத்தப்பட்ட மீன்பிடிக்கலன்'' *(Motorised fishing vessel)* என்பது மீன்பிடிக்கலனை செலுத்துவதற்காக உட்பக்கம் அல்லது தற்காலிகமாக வெளிப்பக்கம் இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன் ஆகும்; | |
| | *(t)* | *''தேசியக் கடல் மீன்வளக் கொள்கை'' என்பது பிரிவு 4-இன் கீழ் அறிவிக்கப்பட்ட தேசியக் கடல் மீன்வளக் கொள்கை ஆகும்;* | |

| | | |
|---|---|---|
| | *(u)* "இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடிக்கலன்" *(Non-motorised fishing vessels)* என்பது மீன்பிடிக்கலனை உந்துவதற்க்கோ அல்லது மீன்பிடிப்பதற்க்கோ எந்தவிதமான இயந்திர சக்தியையும் பயன்படுத்தாத மீன்பிடிக்கலன் ஆகும்; | |
| | *(v)* "அறிவிப்பு" என்பது அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஆகும். "அறிவித்தல்" என்ற பதம் அதற்கேற்ப பொருள் கொள்ளப்படும்; | |
| | *(w)* "இயக்குபவர்" என்பது ஒரு மீன்பிடிக்கலனின் உரிமையாளர் அல்லது தற்போதைக்கு மீன்பிடிக்கலனின் கட்டுப்பாட்டையும், நிர்வாகத்தையும் கொண்டவர் என்று பொருள்படும்; | |
| | *(x)* "மீன்பிடிக்கலனின் உரிமையாளர்" என்பவர் மீன்பிடிக்கலனின் முழு உரிமையாளர் அல்லது பங்குதாரர் ஆவார்.<br>விளக்கம்:- இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "நபர்" என்பது, இணைக்கப்பட்டாலும் இணைக்கப்படாமல் இருந்தாலும், எந்தவொரு தனிநபரையோ அல்லது கூட்டாண்மையையோ அல்லது எந்தவொரு பொது அல்லது தனியார் நிறுவனத்தையோ உள்ளடக்கியது. | |
| | *(y)* "பரிந்துரைக்கப்பட்ட" என்பது இந்த சட்டத்தின் கீழ் விதிகளால் பரிந்துரைக்கப்படுகிறது என்று பொருள்படும். | |
| | *(z)* "பொழுதுபோக்கு மீன்பிடித்தல்" என்பது விளையாட்டு அல்லது மகிழ்ச்சிக்காக மீன் பிடிப்பதாகும் | |
| | *(za)* "சிறிய அளவிலான மீனவர்கள்" என்பவர்கள் பெரிய நிறுவனங்களைத் தவிர மற்ற உரிமையாளர் அல்லது தொழில்முனைவோரால் சிறிய அளவிலான முதலீடு மற்றும் ஆற்றலை பயன்படுத்தி வாழ்வாதாரத்திற்காகவோ, உள்நுகர்வுக்காகவோ அல்லது ஏற்றுமதிக்காகவோ ஒரு நாள் அல்லது பல நாள் மீன்பிடி பயணங்களை மேற்கொள்வோர்; | |
| | *(zb)* "சிறப்பு உரிமம்" என்பது பிரிவு *18*-இன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஆகும்; | |
| | *(zc)* "மாநில அரசு" என்பது கடலோரப் பரப்புகளைக் கொண்ட மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகம் ஆகும்; | |
| | *(zd)* "பிராந்தியக் கடல்நீர் பகுதி" என்பது இந்தியாவின் பிராந்தியக் கடற்பகுதி, கண்டத்திட்டு, பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் மற்றும் மற்ற கடல்சார் மண்டலங்கள் சட்டம் *1976* உட்பிரிவு *3*-இன் படி இந்தியாவின் பிராந்தியக் கடற்பகுதியை குறிப்பதாகும்; | 80 of 1976. |
| | *(ze)* "பாரம்பரிய மீனவர்கள்" என்பவர்கள் வாழ்வாதாரத்திற்கான நற்தேவைகளுக்காக கடல் மீன்பிடித்தொழிலை மரபாகக் கொண்டு கடலோரப் பகுதிகளில் தொன்றுதொட்டு வசிக்கும் பாரம்பரிய மீனவர்கள் சமூகம் மற்றும் கைவினை மீனவர்கள் ஆவர்; | |
| | **அத்தியாயம் 2**<br>**மீன் வளங்களின் நிலையான வளர்ச்சி மற்றும் மேலாண்மை** | |
| தேசியக் கடல் மீன்வளக் கொள்கை | **4.** *(1)* மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, கடல் மீன்வளம் குறித்த தேசியக் கொள்கையை தயாரித்து அறிவிக்கும். | |
| | *(2)* தேசியக் கடல் மீன்வளக் கொள்கை சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதற்கான உத்திகள் உட்பட கடல் மீன்வள மேம்பாட்டிற்கான பரந்த வழிகாட்டுதல்கள் அல்லது கொள்கைகளை வகுக்கும். | |
| | *(3)* மத்திய அரசு அவ்வப்போது, துணைப்பிரிவு *1*-ன் கீழ் அறிவிக்கப்பட்ட தேசியக் கடல் மீன்வளக் கொள்கையை மறுபரிசீலனை செய்து திருத்தலாம். | |

| | | |
|---|---|---|
| கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் | **5.** *(1)* மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, கடல் மீன்வளம் குறித்த தேசியக் கொள்கைக்கு ஏற்ப ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து அறிவிக்கலாம். | |
| | *(2)* கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் பின்வருவனவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் | |
| | *(i)* மதிப்புச் சங்கிலியுடன் கடல் மீன்வளத்தின் நிலையான வளர்ச்சி; | |
| | *(ii)* பாரம்பரிய மற்றும் சிறிய அளவிலான மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்; | |
| | *(iii)* செயற்கைப்பாறைகள் மற்றும் கடல் வளர்ப்பின் மூலம் மீன் வளத்தை மேம்படுத்துதல்; | |
| | *(iv)* பொழுதுபோக்கு மீன்பிடித்தல், நீர் விளையாட்டு, கடல் சார் சுற்றுலா போன்ற கூடுதல் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிற நடவடிக்கைகள்; | |
| | *(v)* கடல் மீனவர்களின் திறனை வளர்ப்பது; | |
| | *(vi)* மதிப்புச்சங்கிலியை வலுப்படுத்துவதற்குத் தேவையான அறுவடைக்கு பிந்தைய மீன்வள உள்கட்டமைப்பின் வளர்ச்சியை மேம்படுத்துதல்; | |
| | *(vii)* கடலில் மீனவர்களின் பாதுகாப்பு. | |
| கடல் மீன்வள மேலாண்மைத் திட்டம் | **6.** *(1)* மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, கடல் மீன்வளத்தின் முழுத்திறனை உணர்ந்து, கடல் மீன்வளம் பற்றிய தேசியக் கொள்கைக்கு ஏற்ப ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடல் மீன்வள மேலாண்மைத் திட்டங்களைத் தயார் செய்து அறிவிக்கலாம். | |
| | *(2)* துணைப்பிரிவு *1*-ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள கடல் மீன்வள மேலாண்மைத் திட்டம், கடல்சார் மீன்வள பாதுகாப்பை உள்ளடக்கியதாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் கடல் மீன்வளங்களின் நீடித்தப் பயன்பாட்டில் கவனம் செலுத்தும். | |
| | *(i)* மீன்பிடிக்கலங்களின் அளவு மற்றும் எண்ணிக்கையை முறைப்படுத்துதல்;<br>*(ii)* இடம் மற்றும் காலத்திற்கேற்ப மீன்பிடிப்பை தடை செய்தல்;<br>*(iii)* மீன் இனங்களின் வகைகளுக்கேற்ப வலைகளின் கண்ணி அளவை நிர்ணயம் செய்வதன் மூலம் குஞ்சு மீன்களை பாதுகாத்தல்;<br>*(iv)* இடம் மற்றும் மீன் வகைகளுக்கேற்ப மீன்பிடி நடைமுறைகளை ஊக்குவித்தல்;<br>*(v)* தேவையில்லாத கடல்வாழ் உயிரினங்கள் வலையில் அகப்படுவதை குறைத்தல். | |
| | *(3)* மத்திய அரசானது துணைப்பிரிவுகள் *(1)* மற்றும் *(2)* இல் உள்ள விதிகளுக்கு பாரபட்சம் இல்லாமல்<br>*(i)* இந்திய மீன்பிடிக்கலன்களால் ஆழ்கடலில் உள்ள மீன்வளங்களை நிலையான மற்றும் பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான நோக்கங்களுக்காக, பன்னாட்டு நிறுவனங்களில் இருந்து வெளிவரும் தீர்மானங்களுக்கு இணங்குவதற்கான நடவடிக்கைகள் மற்றும் இந்தியா கையெழுத்திட்டு இருக்கும் ஒப்பந்தங்கள் ஆகியவை பற்றிய குறிப்புரைகளை அவ்வப்போது தெரிவிக்கும்; | |

| | | |
|---|---|---|
| | *(ii)* *மீன் வளங்களின் முழுமையான மற்றும் நிலையான வளர்ச்சி நோக்கங்களுக்காக மாநில அரசுகளின் கலந்தாலோசித்த பிறகு பொறுப்பான மீன்வளத்திற்கான உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) நடத்தை நெறிமுறையின் அடிப்படையிலான நடவடிக்கைகள், மீன்வள மேலாண்மை மற்றும் இணை மேலாண்மைக்கான சுற்றுச்சூழல் அணுகுமுறையை ஏற்றுக்கொள்வது மற்றும் தேவையான இடங்களில் முன்னெச்சரிக்கை அணுகுமுறையை மேற்கொள்வது போன்றவை தொடர்பான அறிவிப்புகளை செய்யும்.* | |
| | *(4) இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு உரிமதாரரும் உட்பிரிவுகள் (2) மற்றும் (3) -இன் கீழ் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இணங்க வேண்டும்* | |
| கடல் மீன்வளத் தரவுகள் | **7.** *(1) மத்திய அரசின் மீன்வளத்துறை, கடல் மீன்வளம் பற்றிய தேசிய தகவல் களஞ்சியமாக செயல்படும்.* | |
| | *(2) மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அவ்வப்போதைய தேவைகளுக்கான பிரதிநிதித்துவ ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து*<br>*(i) மீன்பிடி, மீன்வளங்கள், மீன் இறங்குதல், மீன்பிடி உள்கட்டமைப்பு, மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் தரவுகளையும் சேகரிக்கும்;*<br>*(ii) பிரிவு (1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை ஒருங்கிணைத்தல், செயலாக்குதல் மற்றும் பரப்புதல் போன்றவற்றை மேற்கொள்ளும்.* | |
| | *(3) துணைப்பிரிவு (2) -இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை சேகரித்தல், தொகுத்தல், செயலாக்குதல் மற்றும் பரப்புதல் ஆகியவை பரிந்துரைக்கப்பட்டபடி நடைபெற வேண்டும்.* | |
| | *(4) மத்திய அரசு, அறிவிப்பின் மூலம், உட்பிரிவு (2) -ன் துணை சார்பு (1) மற்றும் (2) -ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில அல்லது அனைத்து செயல்பாடுகளையும், ஒன்று அதற்கு மேற்பட்ட நிறுவனங்களிடம் ஒப்படைக்கலாம்.* | |
| *மீனவர்கள் மற்றும் மீன்பிடிக்கலன் களின் நலம் மற்றும் பாதுகாப்பு* | **8.** *(1) மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, மீன்வள மேலாண்மைக்கு ஆதரவளிப்பதற்கும், கடலில் உள்ள மீன்பிடிக்கலன்கள் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் பராமரிக்கும்.* | |
| | *(2) மத்திய அரசு, துணைப்பிரிவு (1) -இன் நோக்கங்களுக்காக, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, பல்வேறு வகை மீன்பிடிக்கலன்கள் மற்றும் அவற்றின் பரப்பளவு அல்லது செயல்படும் பகுதிகளுக்கான கண்காணிப்பு, கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு தரநிலைகளை வகுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை பரிந்துரைக்கும்.* | |
| | *(3) மீன்பிடிக்கலனில் உள்ள ஒவ்வொரு மீனவரும் மற்றும் ஊழியர்களும் ஆதார் அட்டை உட்பட அவர்களது அடையாளச்சான்றை எடுத்துச் செல்ல வேண்டும்* | |
| சட்டவிரோத, தெறிவிக்கப்ப டாத மற்றும் ஒழுங்குபடுத்த ப்படாத மீன்பிடித்தல் மீதான தேசிய நடவடிக்கைத் திட்டம் | **9.** *(1) மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட, சட்டவிரோத, தெறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி தடுப்பு மற்றும் அத்தகைய மீன்பிடிப்பை அறவே ஒழித்தல் தொடர்பான சர்வதேச செயல்திட்டத்திற்கிணங்க தேசிய செயல் திட்டத்தை அறிவிக்கும்.* | |

| | | |
|---|---|---|
| | *(2) உட்பிரிவு (1) -இன் கீழ் அறிவிக்கப்பட்ட தேசிய செயல்திட்டம், பிரத்தியேக பொருளாதார மண்டலம் மற்றும் ஆழ்கடல்களில் சட்டவிரோதமான, தெறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைக் (IUU fishing) கட்டுப்படுத்துவதற்காக பின்வரும் கட்டமைப்பை வழங்கும்.*<br><br>*(i) IUU மீன்பிடித்தலை எதிர்கொள்வதன் நோக்கம் மற்றும் சவால்களை மதிப்பீடு செய்தல்;*<br>*(ii) பல்வேறு மேலாண்மை மற்றும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளின் பங்கு மற்றும் செயல்பாடுகளை அடையாளம் காணுதல்;*<br>*(iii) பங்குதாரர்களின் பொறுப்புகளை உணர வைத்தல் ; மற்றும்*<br>*(iv) மத்திய அரசு அத்தியாவசியம் என்று கருதும் பிற தேவைகள்.* | |
| | *(3) மத்திய அரசு, இந்த பிரிவின் விதிகளை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக, இந்த சட்டத்தின் கீழ் ஒவ்வொரு உரிமதாரரும் கடைப்பிடிக்க வேண்டிய அத்தகைய நடவடிக்கைகளை துணைப்பிரிவு (1) -இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடலாம்.* | |
| *பாரம்பரிய மற்றும் சிறிய அளவிலான மீனவர்களுக்கு ஆதரவு* | **10.** *இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடிக்கலன்களை இயக்கும் மீனவர்கள் உட்பட பாரம்பரிய மற்றும் சிறிய அளவிலான மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, மத்திய அரசு பரிந்துரைக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.* | |
| *அயல்நாட்டு பிடிக்கலன்கள் மூலம் மீன்பிடிக்க தடை* | **11.** *இந்தச் சட்டத்தின் கீழ் இந்திய கடல் பகுதிகளில் எந்த அயல்நாட்டு மீன்பிடிக்கலனும் மீன்பிடித்தல் அல்லது மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.* | |
| *அயல்நாட்டு மீன்பிடிக்கலன்கள் கடந்து செல்லுதல்* | **12.** *இந்திய கடற்பகுதி வழியாகச் செல்லும் ஒவ்வொரு அயல்நாட்டு மீன்பிடிக்கலனும், பரிந்துரைக்கப்படும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.* | |
| *அழிவை ஏற்படுத்தக்கூடிய மீன் பிடிப்பதற்கான தடை* | **13.** *எந்தவொரு நபரும் வெடி, வெடிக்கும் பொருட்கள், விஷம், தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள், அழிவை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள், செயற்கை ஒளி போன்ற மீன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய முறைகள் ஆகியவற்றை பயன்படுத்தக்கூடாது.* | |
| | *இருந்தபோதிலும் பரிந்துரைக்கப்பட்ட சில மீன்பிடி முறைகளில் செயற்கை ஒளியின் பயன்பாடு அனுமதிக்கப்படலாம்* | |
| | *மேலும், மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, இந்த பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட வெடிக்கும் பொருள், அழிவை ஏற்படுத்தும் பொருட்கள் அல்லது மீன்பிடி முறைகளை அறிவிப்பின் மூலம் வெளியிடும்.* | |
| *இளம்குஞ்சு மீன்களை பிடிக்கத் தடை* | **14.** *(1) பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்திலோ அல்லது ஆழ்கடலிலோ எந்தவொரு நபரும் இளம்குஞ்சு மீன்பிடித்தல் அல்லது மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது* | |
| | *(2) மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, இளம்குஞ்சு மீன்பிடித்தல் அல்லது மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்கும்* | |
| | *(3) இந்த பிரிவின் நோக்கங்களுக்காக, மத்திய அரசு, அறிவிப்பின் மூலம், இளம்குஞ்சு மீன் வகைக்குள் வரும் பல்வேறு மீன் இனங்களுக்கான இளம்குஞ்சு மீன் அளவுகளைக் குறிப்பிடும்.* | |

| | | |
|---|---|---|
| இந்திய மீன்பிடிக்கலன் களின் மீன்பிடி உரிமம் | **15.** *(1) இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்ட நாளிலிருந்து 180 நாட்கள் முடியும்போது, இந்தச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் மற்றும் ஆழ்கடலில் எந்த ஒரு இந்திய மீன்பிடிக்கலனும் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.* | |
| | *(2) துணைப்பிரிவு (1) -இன் விதிகள் இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடிக்கலன்களுக்கு பொருந்தாது* | |
| உரிமம் வழங்கும் அதிகாரி | **16.** *மாநில அரசுகளின் உரிமம் வழங்கும் அதிகாரி இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமம் வழங்கும் அதிகாரியாக இருப்பார்.* | |
| உரிமத்திற்கான நிபந்தனைகள் | **17.** *(1) எந்த இந்திய மீன்பிடிக்கலனின் உரிமையாளரும், பிரத்தியேகப் பொருளாதார மண்டலம், ஆழ்கடல் அல்லது இரண்டிலும் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உரிமம் வழங்கும் ஆணையத்திடம் விண்ணப்பிக்கலாம்.* | |
| | *(2) உட்பிரிவு (1) -இன் கீழ் உள்ள ஒவ்வொரு விண்ணப்பமும் உரிய படிவத்தில் உரிய விவரங்களைக் கொண்டிருப்பதுடன் பரிந்துரைக்கப்படக்கூடிய கட்டணங்களுடன் இருக்க வேண்டும்.* | |
| | *மீன்பிடிக்கலன்கள், அவற்றின் வகைகள் மற்றும் பரப்பளவு அல்லது செயல்படும் பகுதிகள் அடிப்படையில் உரிமத்திற்கான வெவ்வேறு கட்டணங்கள் பரிந்துரைக்கப்படலாம்* | |
| | *(3) மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு துணைப்பிரிவு (2) -இன் கீழ் உரிமத்திற்கான கட்டணத்தை மத்திய அரசு தீர்மானிக்கும்* | |
| | *(4) துணைப்பிரிவு (2) -இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக்கட்டணம் நிர்ணயிக்கப்பட்ட முறையில் வசூலிக்கப்படும்* | |
| | *(5) உரிமம் உரிய வடிவத்திலும், முறையிலும் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நேரத்திற்குள்ளும் வழங்கப்பட வேண்டும். அந்த உரிமமானது, உரிமத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் மட்டுமே செல்லுபடியாகும்.* | |
| | *இந்த உட்பிரிவில் உள்ள எதுவும், பிராந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்தல் மற்றும் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைந்த உரிமத்தை வழங்கும் உரிம அதிகாரத்தை தடுக்காது.* | |
| | *மேலும், பிராந்திய கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கான உரிமம் பெற்றுள்ள ஒரு நபர் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்காகவும் விண்ணப்பித்தால், தனித்தனி உரிமம் வழங்குவதற்குப் பதிலாக, ஒருங்கிணைந்த உரிமம் வழங்கப்படலாம்.* | |
| | *(6) துணைப்பிரிவு (5) -இன் கீழ் உரிமம் வழங்கும்போது, உரிமம் வழங்கும் அதிகாரம் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்* | |
| | *(i) மீன்பிடிக்கலனின் கடலில் செல்வதற்கான தகுதி மற்றும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு விதிமுறைகள் வணிகக் கப்பல் சட்டம், 1958 –ன் படியும்; மற்றும் சட்டம் ஒழுங்கை பராமரித்தல் அல்லது பொது நலன் சார்ந்த வேறு எந்த விஷயங்களும்;* | 44 of 1958. |
| | *(ii) பிரிவு 6 -இன் கீழ் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளின் தேவைகள்;* | |
| | *(iii) பிரிவு 9 -இன் கீழ் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளின் தேவைகள்.* | |
| | *(7) இந்தப் பிரிவின் கீழ் உரிமம் வழங்க மறுப்பது விண்ணப்பதாரருக்கு எழுத்துப்பூர்வ உத்தரவின் மூலம் தெரிவிக்கப்படும். மேலும் அத்தகைய உத்தரவு மீன்பிடிக்கலனின் ஒரு வகை அல்லது பிரிவுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கும்.* | |

| | | |
|---|---|---|
| | *(8)* இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம், வேறு யாருக்கும் மாறுதல் செய்யப்படக் கூடியதாகவோ, பரிந்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர, வேறு எந்த மூன்றாம் தரப்பினருக்கும் ஆதரவாகவோ இருக்காது. | |
| குறிப்பிட்ட மீன்பிடி செயல்பாடுகளுக்கான சிறப்பு உரிமம் | **18.** *(1)* பொழுதுபோக்கிற்கான மீன்பிடித்தல், நீர் விளையாட்டுகள், கடல்சார் சுற்றுலா மற்றும் வேறு எந்த நடவடிக்கைகளையும் அனுமதிப்பதற்கான சிறப்பு உரிமம் வழங்க மத்திய அரசு மாநில அரசுக்கு அங்கீகாரம் அளிக்கலாம். | |
| | *(2)* மத்திய அரசு ஒரு மீன்பிடிக்கலனை ஆய்வுக்காகவோ, மீன் வளம் தொடர்பான அறிவியல் ஆராய்ச்சிக்காகவோ ஒரு சிறப்பு உரிமத்தின் மூலம் சில நிபந்தனைகளின் பெயரில் அனுமதிக்கலாம். | |
| உரிமத்தை நிறுத்தி வைத்தல் அல்லது ரத்து செய்தல். | **19.** *(1)* ஒர் உரிமதாரர், உரிமம் பெறுவதற்கான அல்லது உரிமத்தை புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தில் ஏதேனும் தவறான அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல்களை அளித்திருந்தால், அந்த உரிமத்தை ஒர் ஆணையின் மூலம் நிறுத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ உரிமம் வழங்கும் அதிகார அமைப்புக்கு உரிமை உண்டு. | |
| | *(2)* உரிமதாரர் இந்த சட்டத்தின் எந்தவொரு விதிகளுக்கும் மீண்டும் மீண்டும் இணங்காமல் இருந்திருந்தால், அதுபோன்ற முறைகேடுகள் இனிவரும் காலங்களில் நடக்காமல் இருக்க உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது அத்தகைய உரிமத்தை நிறுத்தி வைக்க முடியும். | |
| | *(3)* உரிமம் வைத்திருப்பவர் தன் தரப்பை சொல்வதற்கு நியாயமான வாய்ப்புகள் வழங்கப்படாமல், இந்தப் பிரிவின் கீழ் எந்த உரிமமும் இடைநிறுத்தப்படவோ அல்லது ரத்து செய்யப்படவோ கூடாது. | |
| | *(4)* மத்திய அரசு பொதுநலத்திற்காகவும், சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கவும், இச்சட்டத்தின்படி உரிமதாரர் அரசுக்கு ஏதேனும் அபராதம் செலுத்தப்பட வேண்டியது இருந்தாலும், மேற்கண்டவை தொடர்பாக இச்சட்டத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், அவ்வித உரிமத்தை எந்தவித பாரபட்சமும் இல்லாமல் நிறுத்திவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ மத்திய அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. | |
| | *(5)* இந்தப் பிரிவின் கீழ் உரிமம் இடைநிறுத்தப்பட்ட ஒவ்வொரு நபரும், அத்தகைய இடைநீக்கம் செய்யப்பட்ட உடனேயே, மீன்பிடிப்பதை நிறுத்த வேண்டும் அல்லது அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது, மேலும் இடைநீக்க உத்தரவை எழுத்துப்பூர்வமாக ரத்து செய்யப்படும் வரை அத்தகைய நடவடிக்கைகளை மீண்டும் செய்யக்கூடாது. | |
| | *(6)* உரிமம் இடைநிறுத்தப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட உரிமத்தை வைத்திருப்பவர், இடைநீக்கம் செய்யப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட உடனேயே, உரிமத்தை உரிமம் வழங்கும் அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். | |
| கட்டணங்கள் விதிப்பு மற்றும் கட்டண விலக்கு | **20.** *(1)* இந்தச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளும், மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, மத்திய அரசால் நிர்ணயிக்கப்படும் கட்டணங்களுக்கு உட்பட்டது. | |
| | மீன்பிடிக்கலன்களின் வகைகள் மற்றும் பிரிவுகளுக்கு ஏற்ப அல்லது மீன்பிடிக்கலன்களின் செயல்படும் பகுதிகளுக்கு ஏற்ப பல்வேறு விதமான கட்டணங்கள் விதிக்கப்படலாம். | |
| | *(2)* சட்டப்பிரிவின் கீழ் மத்திய அரசானது, ஒரு அறிவிப்பின் மூலம், இயந்திரம் அல்லாத மீன்பிடிக்கலன்கள், இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்கள், அறிவியல் ஆராய்ச்சி ஆய்வுக்கலன்கள் மற்றும் பிற வகை மீன்பிடிக்கலன்களுக்கு கட்டண விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கும். | |

| | | |
|---|---|---|
| | *(3)* மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, ஓர் அறிவிப்பின் மூலம், சில மீன்பிடிக்கலன் வகைகள் மற்றும் பிரிவுகளுக்கும், அல்லது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் மற்றும் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் பிற கலன்களுக்கும் இந்தப் பிரிவின் கீழ் விதிக்கப்படும் கட்டண விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கலாம். | |
| | **அத்தியாயம் 3**<br>**கடல் மீன்வளம் தொடர்பான ஆலோசனைக் குழு** | |
| கடல்மீன்வளம் பற்றிய ஆலோசனைக் குழு | **21.** *(1)* மத்திய அரசு, ஓர் அறிவிப்பின் மூலம், மத்திய அரசு, மாநில அரசுகள், மீனவர்கள் மற்றும் மீன்பிடி அமைப்புகள் மற்றும் சங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கடல் மீன்வளம் குறித்த ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கும். | |
| | *(2)* கடல் மீன் வளம் தொடர்பான ஆலோசனைக் குழு, கடல்மீன்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, மீனவர்கள் நலன் மற்றும் இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்த ஆலோசனைகளை மத்திய அரசுக்கு வழங்கும். | |
| | *(3)* ஆலோசனைக் குழுவின் அமைப்பு, அதன் பரிவர்த்தனை முறை உட்பட்ட அதன் செயல்பாட்டின் விதிமுறைகள், அவ்வப்போது அரசால் பரிந்துரைக்கப்படுவதற்கேற்ப அமையும். | |
| | *(4)* ஆலோசனைக் குழுவுக்கு உதவியாகவும், துணையாகவும் செயல்படுவதற்கு பல உப ஆலோசனைக் குழுக்களை மத்திய அரசு அவ்வப்போது உருவாக்கலாம். | |
| | **அத்தியாயம் 4**<br>**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் குற்றங்களின் தீர்ப்பு** | |
| அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் | **22.** மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, மத்திய அரசு ஓர் அறிவிப்பின் மூலம், மத்திய அல்லது மாநில அரசு அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவை நியமிக்கும். அவ்வப்போது சொல்லப்படும் எண்ணிக்கைக்கேற்ப அமர்த்தப்படும் இக்குழுவில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள், குறிப்பிடப்படும் மீன்பிடிக்கலன்களின் வகைகள் மற்றும் அவற்றின் செயல்பாட்டு இடங்கள் ஆகியவற்றைப் பொறுத்து இச்சட்டத்தை செயல்படுத்தும் அதிகாரிகளாக இருப்பர். | 30 of 1978. |
| அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் அதிகாரங்கள் | **23.** *(1)* எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியும், எந்த மீன்பிடிக்கலனாவது இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரணாகப் பயன்படுத்தப்படுவதாகவோ அல்லது செயல்பாடு மேற்கொள்ளப்படுவதாகவோ கண்டறிந்தால் எந்தவித பிடியாணையுடனோ அல்லது பிடியாணை இல்லாமலோ- | |
| | *(a)* மீன்பிடிக்கலன்களை நிறுத்தி அதில் ஏறி அம்மீன்பிடிக்கலனில் உள்ள மீன் மற்றும் மீன் பிடிப்பதற்கானத் தளவாடங்கள் போன்றவற்றைத் தேடவோ, சோதனையிடவோ செய்யலாம்; | |
| | *(b)* மீன்பிடிக்கலனை இயக்குபவரின் பதிவு ஆவணங்கள், தினசரிக் குறிப்புப் புத்தகம், மீன்பிடிக்கலன் தொடர்பான மற்ற ஆவணங்கள் அல்லது அந்த ஆவணங்களின் நகல்கள் போன்றவற்றை சோதிக்கவோ, பார்க்கவோ கேட்டுப்பெறலாம்; | |
| | *(c)* மீன்பிடிக்கலனில் உள்ள கடலில் பிடித்தவைகளையோ, மீன்பிடி உபகரணங்கள் அல்லது மீன்பிடிக்கலத்திற்குச் சொந்தமான உபகரணங்கள், அவை தொடர்பான ஆவணங்கள் போன்றவற்றை ஆய்வு செய்யலாம்; | |
| | *(d)* இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்குத் தேவையான விசாரணைகளை மேற்கொள்ளலாம். | |

| | | |
|---|---|---|
| | *(2)* இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு அயல்நாட்டு மீன்பிடிக்கலனும் இந்தியாவில் ஏதேனும் சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டிருந்து, அது ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நம்புவதற்குக் காரணமாக இருந்தால், அந்த அதிகாரி பிடியாணையுடனோ, பிடியாணை இல்லாமலோ- | |
| | *(a)* அத்தகைய கலன் மற்றும் கலனுக்கு சொந்தமான துணைக்கருவி, மீன்பிடிப்பு, மீன்பிடி உபகரணங்கள், சேகரிப்புகள் அல்லது சரக்குகளுடன் அத்தகைய கலனைப் பறிமுதல் செய்து தடுத்து வைக்கலாம்;<br>*(b)* அக்கலனால் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை கைப்பற்றி பிடித்து வைக்கலாம்;<br>*(c)* குற்றத்தைச் செய்த அத்தகைய நபரைக் கைது செய்து, மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட துறைமுகத்திற்குக் கலனைக் கொண்டு வருமாறு பறிமுதல் செய்யப்பட்ட வெளிநாட்டு மீன்பிடிக்கலனின் தலைவர் அல்லது நடத்துனருக்குக் கட்டளையிடலாம். | |
| | மேற்கண்ட வகையில் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிக்கலனின்மீது, பிடிபட்ட கலனை பழுது பார்க்கும் இடத்திற்குக் கொண்டு வருதல், அம்மீன்பிடிக்கலனைப் பராமரித்தல், அம்மீன்பிடிக்கலனால் பிடிக்கப்பட்ட உயிர் மீன்பிடிப்பை, உரிய வகையில் பராமரித்தல் போன்றவற்றுக்கான கட்டணங்கள் விதிக்கப்படும். | |
| | *(3)* துணைப்பிரிவு *(2)* -இன் கீழ், அயல்நாட்டு மீன்பிடிக்கலனுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கும்போது, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நியாயமாகத் தேவையான பலத்தைப் பயன்படுத்தலாம். அவ்வாறு பிடிக்கப்பட்டவரின் விவரங்களை எவ்வளவு விரைவாக தெரிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் மத்திய அரசுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். கைது செய்யப்பட்ட நபர்களை குற்றத்தின் அறிக்கையுடன், ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அல்லது ஒரு பெருநகர மாஜிஸ்திரேட் முன்பு விசாரணையைத் தொடங்கும் வகையில் ஒப்படைக்க வேண்டும். | |
| | *(4)* அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஓர் இந்திய மீன்பிடிக்கலனானது பிரிவு *6* அல்லது பிரிவு *8* -இன் உட்பிரிவு *(2)* அல்லது பிரிவு *17* ஆகிய விதிமுறைகளை மீறியதாக நம்புவதற்கு காரணம் இருந்தால், அவர் அத்தகைய மீறல் அறிக்கையைத் தயாரித்து, பிடிபட்ட மீன்பிடிக்கலனுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடங்க, சம்பந்தப்பட்ட தீர்ப்பு அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அறிக்கையின் நகல் கலனின் உரிமையாளர் அல்லது கலனின் கட்டளையிடும் நபருக்கும் வழங்கப்பட வேண்டும். | |
| | இந்த உட்பிரிவின் கீழ் ஒரு குற்றத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எந்த மீன் பிடிப்பையும் அல்லது மீன்பிடி சாதனங்களையும் பறிமுதல் செய்யக்கூடாது. | |
| | *(5)* அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்திய மீன்பிடிக்கலன் பிரிவு *6* அல்லது பிரிவு *13* அல்லது பிரிவு *14* அல்லது பிரிவு *15* ஆகியவற்றின் விதிகளை மீறியதாக நம்புவதற்கு காரணம் உள்ளது எனில், அவர்<br>*(i)* மீன்பிடிப்பு, மீன்பிடி உபகரணங்கள், சேகரிப்புகள் அல்லது சரக்குகளுடன் கலனின் ஆவணங்களையும் கைப்பற்றலாம்;<br>*(ii)* கலனின் உரிமையாளர் அல்லது கலனின் கட்டளையிடும் நபரை, கலனை குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துவதற்கு எழுத்துப்பூர்வமாக வழிநடத்தலாம்;<br>*(iii)* அத்தகைய மீறல் பற்றிய அறிக்கையைத் தயாரித்து, நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட தீர்ப்பளிக்கும் அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம் | |

| | | |
|---|---|---|
| | *(6)* இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு மீன்பிடிக்கலனும் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தைத் தாண்டி மீன் பிடிக்கும் குற்றம் செய்வதை, அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் அலுவலர் கண்டுபிடிக்கும் போது, இந்தப் பிரிவால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் வரம்புகளையும் தாண்டியும் தன் அதிகாரத்தை பயன்படுத்தலாம். அதே நேரத்தில் அது நடப்பிலுள்ள பன்னாட்டு மற்றும் இந்திய சட்டங்களுக்கு பொருந்துவதாகவும் இருக்க வேண்டும். | |
| | *(7)* மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்த பிறகு, ஆழ்கடலில் இயங்கும் இந்திய மீன்பிடிக்கலன்களைக் கட்டுப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கான செயல்பாடுகள் மற்றும் கடமைகள் போன்றவற்றை ஓர் அறிவிப்பு மூலம் வழங்கலாம். | |
| தீர்ப்பு | **24.** *(1)* பிரிவு *23* -இன் உட்பிரிவு *(4)* அல்லது உட்பிரிவு *(5)* -இன் கீழ், அறிக்கை கிடைத்தவுடன், தீர்ப்பு வழங்கும் அதிகாரி, பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் நடவடிக்கைகளைத் தொடங்கி, அறிக்கையில் உள்ள விஷயங்கள் குறித்து விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடமிருந்தும் நியாயமாகக் கேட்க வேண்டியவற்றை கேட்டு, பிறகு அதன் மீது தனது முடிவை அளிக்க வேண்டும். | |
| | *(2)* இந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் அபராதத்துக்கும் மேலாக, தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பெற்ற நபர் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அல்லது ஒரு பெருநகர மாஜிஸ்திரேட் ஆகியவர்களில் யாராக இருந்தாலும், பிரிவு *23* -இன் கீழ், கைப்பற்றப்பட்ட மீன் இயற்கையிலேயே விரைவாகக் கெட்டுப்போகக் கூடியது எனக் கருதினால், அவர் அத்தகைய மீன்களை பொது ஏலத்தில் விற்க உத்தரவிடலாம். பொது ஏல விற்பனை மூலம் பெறப்பட்ட தொகையை அவர் தன்னுடைய பாதுகாப்பானக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். | |
| | *(3)* தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பெற்ற நபர் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அல்லது ஒரு பெருநகர மாஜிஸ்திரேட்டின் இறுதி முடிவின் பேரில், உட்பிரிவு *(2)* -இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, விற்பனை அல்லது ஏலம் அல்லது அதனுடன் தொடர்புடைய பிற செலவுகளைக் கழித்த பிறகு, மீதமுள்ள தொகை கடல் மீன்வள மேம்பாட்டு நிதியில் வரவு வைக்கப்படும். அல்லது அந்தத் தொகை மீன்பிடிக்கலத்தின் உரிமையாளர் அல்லது யாரிடமிருந்து குற்றம் சுமத்தப்பட்ட பிறகு கைப்பற்றப்பட்டதோ அந்த நபர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்ட பிறகு அத்தொகை அந்நபருக்கு அளிக்கப்படும். | |
| | *(4)* பிரிவு *18* -இன் கீழ் வழங்கப்பட்ட சிறப்பு உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் எந்தவொரு மீறலையும் தீர்ப்பதற்கான நடைமுறை, பரிந்துரைக்கப்பட்டபடி இருக்க வேண்டும். | |
| தீர்ப்பளிக்கும் அதிகாரி | **25.** பிரிவு *23* இன் உட்பிரிவு *(4)* மற்றும் உட்பிரிவு *(5)* -இன் படி, தீர்ப்பு வழங்கும் அதிகாரம் பெற்ற நபர், மாநில அரசைக் கலந்தாலோசித்த பிறகு மத்திய அரசால் அறிவிக்கப்படக்கூடிய, மாவட்டத்தின் மீன்வள உதவி இயக்குநர் பதவிக்குக் குறைவாக இல்லாத மாநில அரசு அதிகாரியாக இருப்பார். | |
| மேல்முறையீட்டு அதிகாரி | **26.** சம்பந்தப்பட்ட மாநில அரசுடன் கலந்தாலோசித்த பிறகு மத்திய அரசால் அறிவிக்கப்படும் மாநில அரசின் கூடுதல் இயக்குநர் (மீன்வளத்துறை) பதவிக்குக் கீழே இல்லாத அதிகாரி இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக மேல்முறையீட்டு அதிகாரியாக இருப்பார். | |
| மேல்முறையீடுகள் | **27.** *(1)* பிரிவு *24* -இன் படி தீர்ப்பளிக்கும் அதிகாரத்தின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்த நபரும், அவருக்கு உத்தரவு கிடைக்கப்பெற்ற நாளிலிருந்து *30* நாட்களுக்குள், மேல்முறையீட்டு அதிகாரியிடம் முறையீடு செய்யலாம். | |
| | மேல்முறையீடு செய்யும் நேரத்தில், மேல்முறையீடு செய்யப்பட்ட உத்தரவின் படி செலுத்த வேண்டிய அபராதத் தொகையை செலுத்தாத வரை, மேல்முறையீடு செய்ய முடியாது. | |

| | | |
|---|---|---|
| | மேல்முறையீட்டு அதிகாரி, குறிப்பிட்ட காலக்கெடுவான *30* நாட்களுக்குப் பிறகும், *90* நாட்கள் முடிவடைவதற்கு முன்பும், மேல்முறையீட்டை சரியான நேரத்தில் தாக்கல் செய்வதிலிருந்து போதுமான காரணத்தால் முறையீட்டாளர் தடுக்கப்பட்டதாக திருப்தி அடந்தால், மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம். | |
| | *(2)* மேல்முறையீட்டை தீர்மானிக்கும் போது, மேல்முறையீட்டு அதிகாரம் பெற்ற நபர் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். | |
| ஆவணங்களை கேட்டுப்பெறுவதற்கான மேல்முறையீட்டு அதிகாரியின் அதிகாரம் | **28.** பிரிவு *27* -இன் படி பெறப்பட்ட தீர்ப்பளிக்கும் அதிகாரியின் உத்தரவின் சட்டப்பூர்வ தன்மை மற்றும் நேர்மையைப் பற்றி திருப்திப்படுத்தும் நோக்கில் மேல்முறையீட்டு அதிகாரி, எந்த ஒரு ஆவணங்களையும் கேட்டு ஆய்வு செய்து ஒழுங்கான நடைமுறை மற்றும் பொருத்தமானது என்று கருதும் வகையில் அதற்கான உத்தரவை நிறைவேற்றலாம் | |
| | பாதிக்கப்பட்ட நபருக்கு இவ்விவகாரத்தில் நியாயமான முறையில் விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்படும் வரை எந்தவொரு நபரையும் பாதிக்கும் வகையில் ஒரு தலைபட்சமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படக்கூடாது. | |
| விசாரணை நடத்துவது தொடர்பாக தீர்ப்பளிக்கும் அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிக்கு உள்ள அதிகாரங்கள் | **29.** *(1)* தீர்ப்பளிக்கும் அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரி ஆகியோர் பின்வரும் விஷயங்களை பற்றி எந்தவொரு விசாரணையையும் நடத்தும் போது, சிவில் நடைமுறைச் சட்டம் *1908* -இன் படி சிவில் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் பெறுவர்.<br>*(a)* சாட்சிகளை அழைத்தல் மற்றும் அவர்களின் வருகையை உறுதிசெய்தல்;<br>*(b)* தேவையான ஆவணங்களை கண்டறிந்து சமர்ப்பிக்க அறிவுறுத்துதல்;<br>*(c)* எந்தவொரு நீதிமன்றத்திலிருந்தும், எந்தவொரு பொது ஆவணத்தையோ அல்லது அதன் நகலையோ கோருதல்;<br>*(d)* பிரமாணப் பத்திரங்களின் மீதான ஆதாரங்களைப் பெறுதல் மற்றும்<br>*(e)* சாட்சிகளையும் அல்லது ஆவணங்களையும் ஆராய்வதற்கான குழுக்களை அமைத்தல். | 5 of 1908. |
| | **அத்தியாயம் 5**<br>**குற்றங்களும் அபராதங்களும்** | |
| இந்திய கடல் பகுதிகளில் சட்ட விதிமீறலில் ஈடுபடும் அயல்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கான அபராதம் | **30.** *(i)* பிரிவு *11* -க்கு முரணாக இந்தியாவின் கடல்சார் மண்டலங்களில் மீன்பிடிப்பதாகக் கண்டறியப்பட்ட எந்த அயல்நாட்டு மீன்பிடிக்கலமும் அதன் மீன்பிடி, வலை, உபகரணங்கள், கலனில் உள்ள பொருட்கள் அல்லது சரக்குகளுடன் பறிமுதல் செய்யப்படும். அவ்வாறு பறிமுதல் செய்யப்படும். அக்கலத்தின் உரிமையாளருக்கோ அல்லது கலனை இயக்குபவருக்கோ இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிக்கப் படக்கூடிய சிறைத் தண்டனையும் அல்லது *1* கோடி ரூபாய் வரை அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படலாம்; | |
| | *(ii)* பிரிவு *12* -க்கு முரணாக இந்திய கடல் பகுதியின் வழியாகச் செல்லும் மீன்பிடிக்கலன்களுக்கு *10* லட்சம் ரூபாய்க்கு குறையாமல் *20* லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய அபராதம் விதிக்கப்படலாம். | |

| பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்களில் சட்ட விதிகளை மீறும் இந்திய மீன்பிடிக் கலன்களுக்கான அபராதம் | **31.** *(1)* பிரிவு *13* அல்லது பிரிவு *15* -க்கு முரணாக பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் செல்லுபடியாகும், உரிமம் இல்லாமல் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீன்பிடிக்கலன்களுக்கு பின்வரும் அட்டவணையின் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அபராதம் விதிக்கப்படலாம். முறையே முதல் நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் இரண்டாவது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மீன்பிடிக்கலன்களின் வகைகள் போன்றவற்றை கவனிக்கவும். |
|---|---|

அட்டவணை

| குற்றங்கள் | மீன்பிடிக்கலனின் வகை | முதல் குற்றத்திற்கான அபராதம் | இரண்டாவது குற்றத்திற்கான அபராதம் | மூன்றாவது மற்றும் அதற்கடுத்த குற்றங்களுக்கான அபராதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பிரிவுகள் *13* மற்றும் *15* | *15* மீட்டருக்கு குறைவான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | இல்லை | இல்லை | ரூ. *2,000* அபராதம் |
| | *15* மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *2,000* அபராதம் | ரூ. *5,000* அபராதம் | ரூ. *10,000* அபராதம் |
| | *15* மீட்டருக்கு குறைவான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *5,000* அபராதம் | ரூ. *10,000* அபராதம் | ரூ. *25,000* அபராதம் |
| | *15* மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *10,000* அபராதம் | ரூ. *20,000* அபராதம் | ரூ. *50,000* அபராதம் |

(2) பிரிவு 6 அல்லது பிரிவு 8 -இன் உட்பிரிவு (2) அல்லது பிரிவு 17 - இன் படி குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மாறாக பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த ஒரு இந்திய மீன்பிடிக்கலனும் பின்வரும் அட்டவணையின் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது நெடுவரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு அபராதம் விதிக்கப்படும். முதல் நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் இரண்டாவது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மீன்பிடிக்கலனின் வகைகள் போன்றவற்றை கவனிக்கவும்.

அட்டவணை

| குற்றங்கள் | மீன்பிடிக்கலனின் வகை | முதல் குற்றத்திற்கான அபராதம் | இரண்டாவது குற்றத்திற்கான அபராதம் | மூன்றாவது மற்றும் அதற்கடுத்த குற்றங்களுக்கான அபராதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பிரிவுகள் 6,8 (2) மற்றும் 17 | 15 மீட்டருக்கு குறைவான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | இல்லை | இல்லை | ரூ. 1,000 அபராதம் |
| | 15 மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. 1,000 அபராதம் | ரூ. 2,000 அபராதம் | ரூ. 5,000 அபராதம் |
| | 15 மீட்டருக்கு குறைவான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. 3,000 அபராதம் | ரூ. 5,000 அபராதம் | ரூ. 10,000 அபராதம் |
| | 15 மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. 5,000 அபராதம் | ரூ. 10,000 அபராதம் | ரூ. 20,000 அபராதம் |

| | | |
|---|---|---|
| ஆழ்கடல் மீன்பிடிப்பில் சட்ட விதிகளை மீறும் இந்திய ஆழ்கடல் மீன்பிடிப்பு கலன்களுக்கான அபராதம் | **32.** *(1)* பிரிவு *13* அல்லது பிரிவு *15* -க்கு முரணாக ஆழ்கடலில் செல்லுபடியாகும், உரிமம் இல்லாமல் மீன்பிடித்தல் அல்லது மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் எந்த ஒரு இந்திய மீன்பிடிக்கலன்களும் பின்வரும் அட்டவணையின் மூன்றாவது மற்றும் நான்காவது நெடுவரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு அபராதம் விதிக்கப்படும். முதல் நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் மற்றும் இரண்டாவது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மீன்பிடிக்கலங்களின் வகைகள் இவற்றை கவனிக்கவும். | |

அட்டவணை

| குற்றங்கள் | மீன்பிடிக்கலனின் வகை | முதல் குற்றத்திற்கான அபராதம் | இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த குற்றங்களுக்கான அபராதம் |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| பிரிவுகள் *13* மற்றும் *15* | *15* மீட்டருக்கு குறைவானஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *25,000* அபராதம் | ரூ. *50,000* அபராதம் மற்றும் *30* நாட்களுக்கு மீன்பிடிக்கலன் பறிமுதல் |
| | *15* மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *50,000* அபராதம் | ரூ. *2,00,000* அபராதம் மற்றும் *30* நாட்களுக்கு மீன்பிடிக்கலன் பறிமுதல் |

*(2)* மீன்பிடித்தல் மற்றும் மீன்பிடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீன்பிடிக்கலன்கள், பிரிவு *6* -இன் உட்பிரிவு *(3)* -இன் வகைப்பாடு *(1)* -ஐ மீறும் வகையில், கீழ்க்கண்ட அட்டவணையின் மூன்றாவது மற்றும் நான்காவது நெடுவரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு அபராதம் விதிக்கப்படும். முதல் நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்காக இரண்டாவது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மீன்பிடிக்கலங்களின் வகை இவற்றை கவனிக்கவும்.

அட்டவணை

| குற்றங்கள் | மீன்பிடிக்கலனின் வகை | முதல் குற்றத்திற்கான அபராதம் | இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த குற்றங்களுக்கான அபராதம் |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| பிரிவு *6 (3) (i)* | *15* மீட்டருக்கு குறைவானஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள் | ரூ. *20,000* அபராதம் | ரூ. *40,000* அபராதம் மற்றும் உரிமம் *30* நாட்கள் வரை நிறுத்திவைக்கப்படும் |

| | | |
|---|---|---|
| | <table><tr><td></td><td>*15 மீட்டருக்கு அதிகமான ஒட்டுமொத்த நீளமுள்ள இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிக்கலன்கள்*</td><td>*ரூ. 25,000 அபராதம்*</td><td>*ரூ. 1,00,000 அபராதம் மற்றும் உரிமம் 30 நாட்கள் வரை நிறுத்திவைக்கப்படும்*</td></tr></table> | |
| *சிறப்பு உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதற்கான அபராதம்* | **33.** *பிரிவு 18 -இன் படி வழங்கப்பட்ட சிறப்பு உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க எந்த ஒரு இந்திய மீன்பிடிக்கலனும் தவறினால், அக்கலனின் உரிமையாளர் அல்லது இயக்குபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் அத்துடன் அவருடைய மீன்பிடிக்கலனின் உரிமம் நிறுத்தி வைக்கப்படும் அல்லது ரத்து செய்யப்படும்.* | |
| *அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை பணிபுரிய விடாமல் தடுத்ததற்கான அபராதம்* | **34.** *(1) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் யாரேனும் ஒருவர் வேண்டுமென்றே தடை செய்தால், அவர் தண்டிக்கப்படலாம்*<br>*(i) இந்திய மீன்பிடிக்கலனின் ஒட்டுமொத்த நீளம் 15 மீட்டருக்கு குறைவாக இருந்தால் ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் மற்றும் ஒட்டு மொத்த நீளம் 15 மீட்டருக்கு அதிகமாக இருந்தால் பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்;*<br>*(ii) அயல்நாட்டு மீன்பிடிக்கலனிற்கான அபராதம் 5 லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாம்.* | |
| *நிறுவனங்களின் குற்றங்கள்* | **35.** *(1) இந்தச் சட்டத்தின் படி, ஒரு குற்றம் ஒரு நிறுவனத்தால் செய்யப்பட்டிருந்தால், குற்றம் நடந்த நேரத்தில் நிறுவனத்தில் பணியில் இருந்த ஒவ்வொரு நபரும் அல்லது நிறுவனத்தின் வணிகத்தை நடத்தும் பொறுப்பானவர் அல்லது நிறுவனம், அந்தக் குற்றத்தின் குற்றவாளியாகக் கருதப்பட்டு, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கேற்ப தண்டிக்கப்படுவார்* | |
| | *இந்த உட்பிரிவின் படி, ஒருவருக்குத் தெரியாமல் குற்றம் நடைபெற்றது மற்றும் அந்தக் குற்றம் நடைபெறாமல் இருக்க தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார் என்று நிரூபிக்கப்பட்டால் எத்தகைய தண்டனைக்கும் அந்த நபர் உள்ளாக மாட்டார்.* | |
| | *(2) இருந்த போதிலும், உட்பிரிவு (1) -இன் படி, ஒரு நிறுவனம் ஒரு குற்றத்தைச் செய்திருந்தாலும், அந்த குற்றம் எந்த இயக்குநரின் ஒப்புதலுடன் அல்லது உறுதுணையுடன் செய்யப்பட்டுள்ளது அல்லது எந்த ஒரு இயக்குனரின் புறக்கணிப்பு காரணமாக செய்யப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டால் அந்நிறுவனத்தின் மேலாளர், செயலாளர் அல்லது மற்ற அதிகாரி, அத்தகைய இயக்குனர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அதிகாரியும் அந்தக் குற்றத்தின் குற்றவாளியாகக் கருதப்பட்டு, அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு, அதற்கேற்ப தண்டிக்கப்படுவர்.* | |
| | **அத்தியாயம் 6**<br>**இதர விவரங்கள்** | |
| *நிதி ஆதார அமைப்பு* | **36.** *(1) கடல் மீன்வள மேம்பாட்டு நிதி என்று அழைக்கப்படும் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டு அதில் கீழ்கண்டவை வரவு வைக்கப்படும்.* | |
| | *(a) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு கொடுக்கக்கூடிய மானியங்கள் அல்லது கடன்கள்;* | |

| | | |
|---|---|---|
| | *(b)* இந்தச் சட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட அனைத்து ரசீதுகள் ; மற்றும் | |
| | *(c)* இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மாநில அரசு அல்லது நிறுவனத்தால் கொடுக்கப்படக்கூடிய மானியங்கள் அல்லது கடன்கள். | |
| | *(2)* இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடிக்கலன்களை இயக்கும் பாரம்பரிய மீனவர்கள் உட்பட அனைத்து மீனவர்களின் நலனுக்காகவும், கடல் மீன்பிடி மற்றும் அது தொடர்புடைய நடவடிக்கைகளின் நிலையான வளர்ச்சி மற்றும் மேலாண்மைக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படும். | |
| | *(3)* மத்திய அரசு, ஓர் அறிவிப்பின் மூலம், இந்நிதியைப் பராமரிக்க மற்றும் நிர்வகிக்க ஒரு நிறுவனத்தை நியமிக்கும். | |
| தண்டனைக்குறிய குற்றங்கள் | **37.** கிரிமினல் நடைமுறைச் சட்டம், *1973* -இல் இல்லாவிட்டாலும், பிரிவு *28* -இன் கீழ் குற்றங்களாக அறியப்பட்டால் அவை தண்டிக்கப்படக்கூடியவை. | 1 of 1974. |
| நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு | **38.** *(1)* அதிகாரப்பூர்வ அதிகாரி அல்லது தீர்ப்பு வழங்கும் அதிகாரி அல்லது மேல்முறையீட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள எந்த அதிகாரியும் இச்சட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு அவரது கடமையை செய்வதற்காகவும், நல்லெண்ண அடிப்படையிலும் எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் மீது வழக்குத் தொடரவோ அல்லது குற்றம் சுமத்தவோ முடியாது. | |
| | *(2)* இந்த சட்டத்தின் விதிகளின் படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட விரும்பும் எந்தவொரு சேதத்திற்கும் அல்லது ஏற்படக்கூடிய எந்தவொரு சேதத்திற்கும் அரசாங்கத்திற்கு எதிராக எந்த வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கைகளோ எடுக்க முடியாது. | |
| விதிகளை உருவாக்கும் அதிகாரம் | **39.** *(1)* மத்திய அரசு, மாநில அரசுடன் கலந்தாலோசித்த பிறகு, ஓர் அறிவிப்பின் மூலம், இந்தச் சட்டத்தின் விதிகளை நிறைவேற்றுவதற்கான விதிகளை உருவாக்கலாம். | |
| | *(2)* குறிப்பாக, மேற்கூறிய அதிகாரங்களின் பொதுத்தன்மைக்கு பாரபட்சம் இல்லாமல், அத்தகைய விதிகள் பின்வரும் அல்லது அனைத்து விஷயங்களுக்கும் வழங்கப்படலாம் | |
| | *(a)* பிரிவு *7* -இன் உட்பிரிவு *(3)* -இன் படி தகவல்களை சேகரித்தல், தொகுத்தல், செயலாக்குதல் மற்றும் பரப்புதல்; | |
| | *(b)* பிரிவு *10* -இன் படி இயந்திரம் பொருத்தப்படாத மீன்பிடிக்கலனை இயக்கும் மீனவர்கள் உட்பட பாரம்பரிய மற்றும் சிறிய அளவிலான மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்; | |
| | *(c)* பிரிவு *12* -இன் படி இந்திய கடல் பகுதி வழியாகச் செல்லும் அயல்நாட்டு மீன்பிடிக்கலன்கள் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை; | |
| | *(d)* பிரிவு *13* -இன் படி செயற்கை ஒளியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும் மீன்பிடி முறைகள்; | |
| | *(e)* உட்பிரிவு *(2)* -இன் படி படிவம், விவரங்கள் மற்றும் கட்டணம், உட்பிரிவு *(4)* -இன் படி கட்டணம் வசூலிக்கும் முறை, உட்பிரிவு *(5)* -இன் படி உரிமம் வழங்கப்பட வேண்டிய படிவம், முறை மற்றும் நேரம் மற்றும் பிரிவு *17* -இன் உட்பிரிவு *(8)* -இன் படி உரிமத்தை மாற்றுவதற்கான விதிவிலக்கான சூழ்நிலைகள்; | |
| | *(f)* பிரிவு *18* -இன் உட்பிரிவுகள் *(1)* மற்றும் *(2)* -இன் படி சிறப்பு உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்; | |

| | | |
|---|---|---|
| | *(g)* பிரிவு *19* -இன் உட்பிரிவு *(1)* -இன் படி உரிமத்தை இடைநீக்கம் மற்றும் ரத்து செய்யும் முறை; | |
| | *(h)* பிரிவு *20* -இன் உட்பிரிவு *(1)* -இன் கீழ் விதிக்கப்படும் கட்டணம் மற்றும் அதை வசூலிக்கும் விதம்; | |
| | *(i)* பிரிவு *21* -இன் உட்பிரிவு *(3)* -இன் படி ஆலோசனைக் குழுவின் அமைப்பு மற்றும் அதன் செயல்பாட்டின் விதிமுறைகள்; | |
| | *(j)* பிரிவு *23* -இன் உட்பிரிவு *(2)* -இன் படி தடுத்து வைக்கப்பட்டுள்ள அயல்நாட்டு மீன்பிடிக்கலன்களுக்கு விதிக்கப்படும் கட்டணங்கள்; | |
| | *(k)* பிரிவு *24* -இன் உட்பிரிவு *(1)* -இன் படி தீர்ப்பளிக்கும் அதிகாரியால் விசாரணை மற்றும் நடவடிக்கைகளைத் தொடங்குதல் மற்றும் பிரிவு *24* -இன் உட்பிரிவு *(4)* -இன் படி தீர்ப்பளிப்பதற்கான நடைமுறை; | |
| | *(l)* பிரிவு *27* -இன் உட்பிரிவு *(2)* -இன் படி மேல்முறையீட்டு அதிகாரி மேல்முறையீட்டின் மீது முடிவெடுப்பதற்கான நடைமுறைகள்; | |
| | *(m)* பிரிவு *33* -இன் உட்பிரிவு *(2)* -இன் படி கடல் மீன்வளம் தொடர்பான நடவடிக்கைகள்; | |
| | *(n)* சேர்க்கப்படக்கூடிய அல்லது பரிந்துரைக்கப்பட கூடிய இன்ன பிற விஷயங்கள். | |
| பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படுவதற்கான விதிகள் மற்றும் அறிவிப்புகள் | **40.** இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், அது உருவாக்கப்பட்டவுடன் கூடிய விரைவில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் அமர்வின்போதும், மொத்தம் *30* நாட்களுக்கு, ஓர் அமர்வு அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளில் வைக்கப்படும். அடுத்தடுத்த அமர்வுகள் மற்றும் அமர்வு முடிந்த உடனேயே அல்லது மேற்கூறிய அடுத்தடுத்த அமர்வுகள் முடிவடைவதற்கு முன்பு, இரு அவைகளும் விதியில் ஏதேனும் மாற்றங்களைச் செய்ய ஒப்புக்கொண்டால் அல்லது விதியை உருவாக்கக்கூடாது என்று இரு அவைகளும் ஒப்புக்கொண்டால், விதி அதன்பிறகு ஏற்படக்கூடிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றப்பட்ட வடிவில் நடைமுறைக்கு வரும் அல்லது நடைமுறைக்கு வராமலே போகும். எனினும் எந்தவிதமான மாற்றமும் அல்லது ரத்துசெய்தலும் பாரபட்சமின்றி இருக்க வேண்டும். | |
| *1976* ஆம் ஆண்டின் *80*ஆம் சட்டத்தின் விளைவு | **41.** பிராந்தியக் கடல் பகுதி, கண்டத்திட்டு, பிரத்தியேகப் பொருளாதார மண்டலம் மற்றும் பிற கடல்சார் மண்டலங்கள் சட்டம், *1976* -இன் பிரிவு *7* -இன் உட்பிரிவு *(5)* இந்த சட்டம் தொடர்பாக எந்த விளைவையும் ஏற்படுத்தாது. | 80 of 1976. |
| சிரமங்களை நீக்கும் அதிகாரம் | **42.** *(1)* இந்தச் சட்டத்தின் விதிகளைச் செயல்படுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், மத்திய அரசு, அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்பட்ட உத்தரவின் மூலம், இந்தச் சட்டத்தின் விதிகளுக்கு முரணானவை, தேவையானவை ஆகியவற்றை குறிப்பிட்டு சிரமத்தை நீக்கலாம். | |
| | இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பிறகு இந்தப் பிரிவின் கீழ் எத்தகைய உத்தரவும் போட முடியாது. | |
| | *(2)* இந்தப்பிரிவின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு ஆணையும், அது இயற்றப்பட்டவுடன், பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் சமர்ப்பிக்கப்படும் | |
| ரத்து மற்றும் இருப்பு செய்தல் | **43.** *(1)* இந்தியக் கடல் மண்டலங்கள் (அயல்நாட்டுக்கலன்கள் மூலமாக மீன்பிடிக்க கட்டுப்பாடு) சட்டம், *1981,* இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. | 42 of 1981. |

| | | |
|---|---|---|
| | *(2)* மேற்கண்ட சட்டம் ரத்து செய்யப்பட்ட போதிலும், இந்தச் சட்டத்தின் விதிகளுடன் முரண்படாத எந்த ஒரு அறிவிப்பு, உத்தரவு, நியமனம், சான்றிதழ், அறிவிப்பு அல்லது வழங்கப்பட்ட ரசீது, வழங்கப்பட்ட விண்ணப்பம் அல்லது வழங்கப்பட்ட உரிமம் உட்பட, ரத்து செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் அல்லது எந்த ஒரு நடவடிக்கையும் இந்தச் சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. | |